(இ) அவர்கள் இக்குறையைச் சரி செய்யுமாறு கோரி இரண்டாண்டுகளுக்கு முன்னரே பள்ளிக் கல்வி இயக்குநருக்கு விண்ணப்பித்துக் கொண்டனரா ?

(உ) இது குறித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளனவா ?

(எ) இல்லையெனில், தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மாநிலங்கள் திருத்தி அமைக்கப்பட்டபோது கன்னியாகுமரி மாவட்ட ஆசிரியர்கள் தாங்கள் திருவாங்கூர்-கொச்சி சம்பள விகிதத்தில் என்ன சம்பளத்தைப் பெற்றிருக்க முடியுமோ அச்சம்பளத்தை தமிழ் நாட்டிலும் பெற அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் பி.டி. பட்டம் பெறுவதற்கு முன்பு செய்த பணியைக் கணக்கில் கொண்டு தனி ஊதிய உயர்வு அளிக்கும் பிரச்சினை அப்பொழுது எழவில்லை.

(இ) இல்லை.

(உ) & (எ) இக்கேள்விக்கு இடமில்லை.

Teachers Transferred from Andhra Pradesh

* 242 Q.—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any representations have been received from the teachers transferred from Andhra Pradesh, consequent on the 'Pataskar Award' and working in the Management Schools in Tiruthani Taluk, stating that their pay had not been refixed with effect from 1–6–1960, as per the First Pay Commission's recommendations taking into account their service in Andhra Pradesh; and

(b) if so, the action taken to refix their pay and to pay the arrears due to them ?

ஆந்திரப் பிரதேசத்திலிருந்து மாற்றப்பட்ட ஆசிரியர்கள்

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) "படாஸ்கர் குழுவின் தீர்ப்பினை" யொட்டி ஆந்திரப் பிரதேசத்திலிருந்து மாற்றப்பட்டவர்களும், திருத்தணி வட்டத்திலுள்ள தனியார் பள்ளிகளில் பணிபுரிபவர்களுமான ஆசிரியர்களிடமிருந்து, அவர்கள் ஆந்திரப்

1974 மார்ச் 29]

பிரதேசத்தில் தாங்கள் ஆற்றிய பணியைக் கணக்கில் எடுத்துக்கொண்டு முதல் சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகளுக்கிணங்க தங்களின் சம்பளம் 1—6—1960-லிருந்து மீண்டும் வரையறுக்கப்படவில்லையென முறையீடுகள் வரப்பெற்றுள்ளனவா ?

(இ) ஆமெனில், அவர்களின் சம்பளத்தை மீண்டும் வரையறுப்பதற்கும், அவர்களுக்குச் சேரவேண்டிய நிலுவைத் தொகைகளைக் கொடுப்பதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இம்மனு ஆய்வு செய்யப்பட்டு ஊதிய கோரிக்கை நிராகரிக்கப் பட்டது.

திரு. செ. முத்துசாமி : ஆந்திரப் பிரதேசத்திலிருந்து எடுத்துக்கொள்ளப் பட்ட ஆசிரியர்கள் யாருக்கும் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படக்கூடாது என்று இருந்தும்கூட, அங்கிருந்து வந்தவர்களுக்கு ஒரு தகுதியான நிலையை நிர்ணயித்துக் கொடுக்காமலிருப்பது நியாயமாகாது. அப்படிக் கொடுக்கப் படாவிட்டால், அவர்கள் தங்களை ஆந்திராவுக்கே அனுப்பிவிடட்டும் என்ற ஒரு புதிய கோரிக்கையையும் எழுப்பியிருக்கிறார்கள். எனவே அவர்கள் பிரச்சி னைக்குத் தீர்வு காணவும், ஊதிய உயர்வு கொடுக்கவும் அரசு முடிவெடுக்குமா, அதைப்பற்றி ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆந்திரப் பிரதேசத்திலேயிருந்து தமிழ் நாட்டுக்கு மாற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்யும்போது அவர்கள் 1—11—58-லேயிருந்து 31—5—60 வரை யில் உள்ள ஊழியக்காலத்திற்கு வெயிட்டேஜ் அளித்தால் போதும் என்று முடிவெடுத்து, 1—11—58 முதல் 31—5—60 வரைக்கான ஊதியம் கணக்கில் எடுக்கப்பட்டு ஊதியத்தைத் திருத்தி ஆணையிடப்பட்டது. திருத்தணி வட்டத் திலுள்ள தனியார் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களின் கோரிக்கையும் பரிசீலனை செய்யப்பட்டு, ஆந்திர மாநிலத்தில் பணிபுரிந்த காலமும் கணக்கில் எடுக்கப் பட்டு 1—11—58-லேயே திருத்தி அமைக்கப்பட்டுவிட்டதால், அவர்களுடைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டுவிட்டது.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, அவர்கள் இங்கிருந்துதான் ஆந்திரப் பிரிவினையின்போது ஆந்திரத்திற்குச் சென்றவர்கள். ஆந்திரா சம்பளக் கமிஷன் அவர்களுடைய ஊதியத்தை மாற்றியமைத்திருந்தாலும், அவர்களுடைய ஊதியம் மிகக்குறைவாக இருக்கிறது. தமிழ் நாட்டிலே உள்ள

சலுகைகளும் இல்லாமல் இருக்கிறது. அவர்கள் கொஞ்சம் பேர்தான் இருக்கிருர்கள். தமிழ் நாட்டிலே அவர்களைவிட ஊழிய காலம் குறைவாக இருப்பவர்கள் அவர்களைவிட அதிகமாகச் சம்பளம் வாங்குகிருர்கள். எனவே கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு அதைக் கொண்டுவருகிறேன். இடையிலே பிரிந்து சென்றுவிட்டுத் திரும்பிவந்திருப்பதன் காரணமாக அதிகமான ஊழிய காலம் இருந்தும், சம்பளம் குறைவாக இருக்கிறது. இதை அரசு கருணையோடு பரிசீலித்து நியாயம் வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதலிலேயே நான் தெளிவாகச் சொன்னேன். 1—11—58 வரைதான் திருத்தியமைக்கப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு 1—11—58 முதல் 31—5—60 வரைக்கான பணிக்காலத்திற்கு மட்டும் வெயிடேஜ் அளிக்கப்பட்டது. அந்த பிரச்சினை மீண்டும் மீண்டும் பரிசிலிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டது. இப்பொழுது ஊதியமாற்றம் செய்வதற்குப் பரிசீலனை இல்லை.

Liberalised Pension Benefits to the Personnel belonging to 'B' Wing

* 243 *Q.*—THIRU S. MUTHUSWAMY (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Government (Board) High School Head Masters' Special Conference held in Madras during September, 1973, has requested the grant of liberalised pension benefits to all personnel belonging to 'B' Wing, who retired between 1-4-66 and 1-4-70; and

(*b*) if so, the action proposed to be taken by the Government in the matter?

'பி' பிரிவு பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்கள் அனைவருக்கும் தாராளமாக்கப்பட்ட ஓய்வூதியம்

திரு. செ. முத்துசாமி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) 1—4—1966-க்கும், 1—4—1970-க்கும் இடைப்பட்ட கால அளவில் பதவி ஓய்வு பெற்ற 'பி' பிரிவு பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்கள் அனைவருக்கும் தாராளமாக்கப்பட்ட ஓய்வூதியம் அளிக்கப்பட வேண்டுமென 1973